பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

12 12 2024 **THURSDAY** **7.15 PM**

தலைப்புச் செய்திகள்

1. உலக செஸ் சாம்பியன் போட்டியில் பட்டம் வென்ற குகேஷுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

2. நேபாளத்துடனான பாதுகாப்புத்துறை ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்படும் என்று இந்தியா கூறியுள்ளது.

3. ஐரோப்பிய யூனியனுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

4. சட்டீஸ்கரில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் ஏழு நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

5. வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி வலுவிழக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>

உலக செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் குகேஷ் பட்டம் வென்று வரலாற்று சாதனை படைத்தார்.

சிங்கப்பூரில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதிச்சுற்றில் அவர் சீனாவின் **Ding Liren**-ஐ வென்றார்.

உலக செஸ் சாம்பியன் போட்டியில் பட்டம் பெறும் இளம் வீரர் என்ற சாதனையையும் அவர் படைத்தார்.

உலக செஸ் சாம்பியன் பட்டத்தை வென்ற குகேஷுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பாராட்டு தெரிவித்துள்ளார்.

செஸ் விளையாட்டுப்போட்டியில் இந்தியாவின் வலிமையை இது உணர்த்துவதாக அவர் கூறியுள்ளார்.

குகேஷின் சாதனையை கண்டு நாடே பெருமிதம் கொள்வதாகவும் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா, முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் உட்பட பலர் குகேஷுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

<<<<<<>>>>

இந்தியாவும் - நேபாளமும் பல்வேறு விஷயங்களில் பரஸ்பர அக்கறையோடு ஒரேமாதிரியான கண்ணோட்டத்தை பகிர்ந்து வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நேபாள நாட்டின் ராணுவ தளபதி ஜென்ரல் அசோக் ராஜ் **Sigdel**–வுடன் அவர் பேச்சு நடத்தினார்.

பாதுகாப்புத்துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது உட்பட இருநாடுகளுக்கு இடையேயான பல்வேறு அம்சங்கள் குறித்து இப்பேச்சுவார்த்தை அமைந்ததாக அவர் கூறினார்.

அண்டை நாடுகளுடன் உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் இந்தியா தொடர்ந்து செயலாற்றி வருவதாக திரு ராஜ்நாத் சிங் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின்கீழ், எஃகு தொழில்துறை துரித வளர்ச்சியை கண்டு வருவதாக மத்திய எஃகு மற்றும் கனரக தொழில்துறை அமைச்சர் திரு ஹெச் டி குமாரசாமி தெரிவித்துள்ளார்.

கார்பன் உமிழ்வை குறைக்கும் வகையில், பசுமை எஃகு உற்பத்தி செயல்பாட்டை புதுதில்லியில் அவர் இன்று தொடங்கிவைத்தார். இதையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், உலக அளவிலான கார்பன்-டை-ஆக்ஸைடு உமிழ்வில் நம் நாட்டில் உள்ள எஃகு ஆலைகள் ஏழு சதவீதத்தை கொண்டிருப்பதாக தெரிவித்தார். இத்துறையில் நிலையான வளர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கில், மத்திய அரசு அர்ப்பணிப்போடு செயல்பட்டு வருவதற்கு பசுமை எஃகு உற்பத்தி ஒரு சான்றாக விளங்கும் என்று அவர் கூறினார்.

சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும், நிலையான வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை பயன்படுத்தி, கார்பன் உமிழ்வை குறைக்கும் வகையில் பசுமை எஃகு உற்பத்தி நடைபெறுவதாக மத்திய அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>

கடந்த பத்தாண்டுகளில் உள்நாட்டு சுற்றுலா அபரிமிதமான வளர்ச்சி கண்டிருப்பதாக மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார். புதுதில்லியில் இன்று, சுற்றுலாத்துறை திட்டங்கள் மற்றும் மேம்பாடு குறித்து செய்தியாளர்களை சந்தித்து அவர் பேசினார். கடந்த இரண்டாண்டுகளில் சுற்றுலாத்துறையில் ஏழு கோடிக்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார். குடியரசுத் தலைவர் மாளிகையின் முன்பு, நாட்டின் பத்தாயிரம் ஆண்டுகால பரிணாமத்தை வெளிக்காட்டும் வகையில் மிகப்பெரிய அருங்காட்சியகம் ஒன்றை அமைக்க அரசு திட்டமிட்டிருப்பதாக அமைச்சர் கூறினார். மேலும், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள மகா கும்ப

விழாவையொட்டி, உத்தரப்பிரதேசத்தில் ஒரு கலாச்சார கிராமத்தை அமைக்க அரசு முடிவு செய்திருப்பதாகவும் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>

ஐரோப்பிய யூனியனுடன் விரிவான, பரஸ்பரம் நலன்களை தரும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்ள இந்தியா விரும்புவதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக, ஐரோப்பிய ஆணைய பிரதிநிதிகள் குழுவினரை புதுதில்லியில் அவர் சந்தித்து பேசினார். ஐரோப்பிய யூனியன் மற்றும் இந்தியா இடையிலான வர்த்தக உறவின் வளர்ச்சி குறித்தும், பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் இருதரப்புக்கும் இடையே பேச்சு நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>

மத்திய அரசின் **UDYAM** தளத்தில் நாளொன்றுக்கு சராசரியாக 30 ஆயிரம் சிறு-குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் பதிவு செய்து வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மக்களவையில் இத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு ஜிதன்ராம் மாஞ்சி அளித்துள்ள பதிலில், கடந்த நவம்பர் மாதம் வரை ஐந்து கோடியே 60 லட்சம் சிறு-குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் இத்தளத்தில் பதிவு செய்திருப்பதாக கூறியுள்ளார்.

இந்த தளத்தில் பெண்களால் செயல்படுத்தப்படும் நிறுவனங்களின் எண்ணிக்கை 2 கோடியே 19 லட்சமாக பதிவாகியுள்ளதாக ஜிதன்ராம் மாஞ்சி குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>

பிரதமரின் உஜ்வாலா திட்டத்தின்கீழ், கடந்த ஓராண்டில் ஒரு கோடியே 60 லட்சம் சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மக்களவையில் இதுதொடர்பான கேள்விக்கு மத்திய பெட்ரோலியத்துறை இணையமைச்சர் திரு சுரேஷ் கோபி அளித்துள்ள பதிலில், 2025-2026-ஆம் ஆண்டுக்கான இலக்கினை கடந்த ஜூலை மாதம் எட்டியதாக தெரிவித்துள்ளார்.

மேலும், பயனாளிகள் தடையற்ற வகையில் சமையல் எரிவாயு இணைப்புகளை பெறும் வகையில், மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக திரு சுரேஷ் கோபி குறிப்பிட்டார்.

<<<<<<>>>>

சட்டீஸ்கரில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது ஏழு மாவோயிஸ்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

நாராயண்பூர் மாவட்டத்தில் உள்ள தெற்கு **Aboojhmaad** பகுதியில் மாவோயிஸ்டுகள் நடமாட்டம் இருப்பதாக கிடைத்த உளவு தகவலின் அடிப்படையில் கூட்டுப்படையினர் இன்று காலை முதல் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாகவும், சுட்டுக்கொல்லப்பட்ட மாவோயிஸ்டுகளின் உடல்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்புப்படை தெரிவித்துள்ளது.

இருதரப்புக்கும் இடையே மோதல் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் பாதுகாப்புப்படை கூறியுள்ளது.

<<<<<<>>>>

ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் இறுதிப்போட்டி நாடு முழுவதும் இரண்டாவது நாளாக இன்றும் நடைபெற்று வருகிறது.

தமிழகத்தில் நாமக்கல் மாவட்டம் பல்லக்காபாளையத்தில் உள்ள தனியார் கல்லூரி ஒன்றில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், மென்பொருள் பதிப்பு எனும் தலைப்பில் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த 126 மாணவ, மாணவியர் ஆர்வமுடன் பங்கேற்று வருகின்றனர்.

தொடர்ந்து 36 மணிநேரமாக போட்டியாளர்கள் இதில் ஈடுபட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>

தமிழக பதிவுத்துறை நடப்பு நிதியாண்டில் இதுவரை 14 ஆயிரத்து 525 கோடி ரூபாய் வருவாய் ஈட்டியிருப்பதாக அத்துறைக்கான மாநில அமைச்சர் திரு பி. மூர்த்தி தெரிவித்துள்ளார். சென்னையில் இன்று நடைபெற்ற அத்துறைக்கான ஆய்வுக்கூட்டத்தில் பேசிய அவர், கடந்த நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் இதேகாலக்கட்டத்தில் ஆயிரத்து 891 கோடி ரூபாய் வருவாய் கூடுதலாக பெறப்பட்டிருப்பதாக குறிப்பிட்டார்.

<<<<<<>>>>

ஜம்மு காஷ்மீரின் பூஞ்ச் மாவட்ட எல்லைப்பகுதியில் ஊடுருவ முயன்ற பாகிஸ்தான் நாட்டை சேர்ந்த ஒருவர் ராணுவத்தினரால் இன்று கைது செய்யப்பட்டார். அவரிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>

வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி, அடுத்த 24 மணிநேரத்தில் வலுவிழக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல தலைவர் திரு பாலச்சந்திரன் கூறியுள்ளார். இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் நெல்லை, தூத்துக்குடி, தென்காசி ஆகிய மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அதிகனமழை பெய்யக்கூடும் என்று தெரிவித்தார்.

<<<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஒடிஷா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Anmol Kharb,** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 15-21, 21-13, 21-13 என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் **Ishika Jaiswal** –ஐ வென்றார்.

இதர மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டங்களில் தன்வி சர்மா, ரக்ஷிதா ஸ்ரீ ஆகியோரும் வெற்றிபெற்று காலிறுதிக்கு தகுதிபெற்றனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Tharun Mannepalli, Abhishek Saini, Rithvik Sanjeevi,** சதீஷ்குமார் கருணாகரன் ஆகியோரும், காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

-------------------

உலக பேட்மிண்டன் இறுதிச்சுற்று போட்டியில் இந்தியாவின் திரிஷா ஜோலி - காயத்ரி கோபிசந்த் இணை, 21-19, 21-19 என்ற செட் கணக்கில்

மலேசியாவின் **Pearly Tan –Thinaah Muralitharan** இணையை வென்றது.

நாளை நடைபெறவுள்ள ஆட்டத்தில் திரிஷா ஜோலி - காயத்ரி கோபிசந்த் இணை - ஜப்பான் இணையை எதிர்கொள்கிறது.

------------------

ஆசிய கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கிப்போட்டியில் இந்தியா இன்று தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

மஸ்கட்டில் நடைபெற்றவுள்ள இப்போட்டி இரவு மணி 8.30-க்கு தொடங்குகிறது.

------------

ஹாக்கி இந்தியா லீக் போட்டியை ஒலிபரப்புவதற்கான ஒப்பந்தம் பிரசார் பாரதி மற்றும் ஹாக்கி இந்தியா இடையே கையெழுத்தாகியுள்ளது.

**<<<<<<END>>>>**